வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 07 03.06.2026 புதன்கிழமை இதழ் : 148 பக்கங்கள் : 08






# யாழ். மக்களுக்கான திட்டங்களை மகிழ்ச்சியுடன் முன்னெடுக்கிறோம்!

## கீரிமலையில் குறிப்பிட்டார் இந்தியத் தூதுவர்

யாழ்ப்பாணம், ஜூன். 03

இந்திய அரசாங்கத்தினால், யாழ்ப்பாண மக்களுக்காக நடைமுறைப்படுத்தப்படும் வேலைத் திட்டங்களை மிகவும் மகிழ்ச்சியாக முன்னெடுத்து வருவதாக இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய வளாகத்தில், இந்திய அரசாங்கத்தின் விசேட நிதி உதவியின் கீழ் அமைக்கப்பட்ட நீர் சுத்திகரிப்பு நிலையம், நேற்று மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

இந்த நீர் சுத்திகரிப்பு நிலையத்தை, இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா, உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.

தொடர்ந்து, விசேட நிகழ்வும், ஆளுநரின் உரையும் இடம்பெற்றது.

பின்னர், அதிதிகள் ஆலய வழிபாடுகளில் பக்திபூர்வமாக ஈடுபட்டனர்.

இங்கு கருத்து வெளியிட்ட இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா, வடக்கு மக்களுடன் இந்தியா கொண்டுள்ள வரலாற்று ரீதியான உறவு தொடர்பில் கருத்துத் 07




# வடக்கு மக்களுக்காக இந்தியாவின் பல்வேறு திட்டங்கள் பரிசீலனையில்!

## மாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 03

வடக்கு மாகாண மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக இந்திய அரசாங்கம் தொடர்ச்சியாக பல்வேறு மிகப் பெரிய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத் துள்ளதுடன், மேலும் பல திட்டங்கள் தற்பொழுது பரி சீலனையில் உள்ளன. இதற்காக 07

# அச்சுவேலி கைத்தொழிற்பேட்டைக்கும் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா விஜயம்



யாழ்ப்பாணம், ஜூன். 03

யாழ்ப்பாணத்துக்கு நேற்று செவ்வாய்க்கிழமை விஜயம் செய்துள்ள இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா அச்சுவேலியில் உள்ள கைத்தொழில் பேட்டைக்கு சென்றார்.

இதன்போது, கைத்தொழில் பேட்டையின் தொழில்பாடுகள் தொடர்பில் அவர் கேட்டறிந்து கொண்டார். 07

# 10 நகரங்களுக்கு ரூ.1,475 மில்லியன்!

கொழும்பு, ஜூன் 03

இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட பிரசித்தி பெற்ற நகரங்களை, அவற்றின் பாரம்பரியம் மற்றும் அடையாளங்களை வெளிப்படுத்தும் வகையில் மாதிரி நகரங்களாக மறுசீரமைப்பதற்கும், அவற்றை வர்த்தகநாமப்படுத்துவதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடையே பிரபலப்படுத்துவதற்கும் 2026 வரவு-செலவுத் திட்டத்தில் 1,475 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 07

# செம்மணி புதைகுழியில் நேற்றும் 8 எலும்புக் கூடுகள் அடையாளம்!

யாழ்ப்பாணம், ஜூன் 03

செம்மணி மனித புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளின் இரண்டாம் நாளான நேற்று செவ்வாய்க்கிழமை 8 என்புகூடுகள் அடையாளம் காணப்பட்ட நிலையில், 5 என்புக்கூடுகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி ஆரம்பமான நிலையில், மே மதம் 09ஆம் திகதி சனிக்கிழமை வரை 12 நாள்கள் அகழ்வு தொடர்ச்சியாக நடைபெற்றது.

9ஆம் திகதியுடன் அகழ்வு பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு நேற்று முன்தினம் திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது கழுத்து பகுதியில் காசு வடிவிலான தாயத்துடன் ஒரு என்பு கூடு அடையாளம் 07



# ஒட்டுமொத்த சுமையையும் திறைசேரி தாங்கமுடியாது!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, ஜூன். 03

பூகோள யுத்த சூழ்நிலை காரணமாக உலகச் சந்தையில் மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள்களின் விலைகள் சுமார் 70 வீதத்தால் உயர்ந்துள்ளது. இதனால் இலங்கையின் மாதாந்த எரிபொருள் இறக்குமதிச் செலவு 521 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளது. இந்த ஒட்டுமொத்தப் பாரிய சுமையையும் திறைசேரியால் மாத்திரம் தனித்துத் தாங்கிக்கொள்ள முடியாது. அவ்வாறு தாங்க முயன்றால் மீண்டும் மக்கள் மீது அதிக வரிகளை விதிக்க நேரிடும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரசாங்கம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எரிபொருள் விநியோகத்தைக் குறைக்கவோ அல்லது கட்டுப்படுத்தவோ இல்லை எனத் தெரிவித்த அவர், நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டுமாயின் திறைசேரி, எரிபொருள் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் ஆகிய மூன்று தரப்பினரும் இந்தச் சுமையைப் பகிர்ந்துகொள்ள வேண்டியது 07

# பிள்ளையானின் மனு மீதான தீர்ப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன். 03

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தனது கைது மற்றும் தடுப்புக்காவலை எதிர்த்து முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தாக்கல் 07

# யாழில் பாடகர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன்.03

தாயக எழுச்சிப் பாடலை மீளமைப்பு செய்து தனது தளத்தில் பதிவிட்ட கிளிநொச்சியை சேர்ந்த பாடகர் ஒருவர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரியில் 07



# கடற்படையின் விசேட படகில் அனலைதீவுக்கு சென்றது பஸ்!

யாழ்ப்பாணம், ஜூன். 03

அனலைதீவுக்கு இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் ஒன்று கடற்படையின் சிறப்பு படகில் எடுத்து செல்லப்பட்டு, அப்பகுதியில் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள கடல் கடந்த தீவுகளில் ஒன்றான அனலைதீவுப் பகுதி மக்களின் போக்குவரத்துக்காக பஸ் ஒன்றினை வழங்குமாறு நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வந்துள்ளனர்

இதன் அடிப்படையில், இலங்கை போக்குவரத்துச் 07

# பஸ் கட்டணங்கள் உயர்வு தற்போதைக்கு இல்லை!

கொழும்பு, ஜூன். 03

நாட்டில் எரிபொருள் விலைகள் உயர்த்தப்பட்டுள்ள போதிலும், தற்போதைக்கு பஸ் கட்டணங்களில் எவ்வித உயர்வும் இருக்காது என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதியமைச்சர் பிரசன்ன குணசேன திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

தற்போது நடைமுறையில் உள்ள தேசிய பஸ் கட்டணக் கொள்கையின் பிரகாரமே, பஸ் கட்டணங்கள் மாற்றியமைக்கப்படும் என்றும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார். 07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலையான எரிசக்தி மையமாக இலங்கையை மாற்றத் திட்டம்!

## ஆஸி., ஐரோப்பா முன்னணி முதலீட்டாளர்கள் வருகை

கொழும்பு, ஜூன். 03

இலங்கையைத் தெற்காசியாவின் நிலையான எரிசக்தி மையமாக மாற்றுவதற்கான முதலீட்டுத் திட்டங்களுடன், அவுஸ்திரேலியா மற்றும் ஐரோப்பாவின் நவீன தொழில்நுட்பம் சார்ந்த இரு முன்னணி எரிசக்தி நிறுவனங்களின் முதலீட்டாளர்கள் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இரவு நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அவுஸ்திரேலிய எரிசக்தி நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இசுரு யாப்பாவும், ஐரோப்பிய எரிசக்தி நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி சுவிற்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த லுடோவிகோ பினோட்டோவும் வருகை தந்துள்ளனர்.

இலங்கையில் வளரக்கூடிய தாவர இலைகளை நவீன தொழில்நுட்பத்துடன் இணைத்து, புத்தம் புதிய ஆற்றல் மூலங்களை அறிமுகப்படுத்த இவர்கள் திட்டமிட்டுள்ளனர். அத்துடன், நவீன எரிசக்தி தொழில்நுட்பத்தை இலங்கைக்கு அறிமுகப்படுத்துவதற்கும், பெட்டரி மூலம் ஆற்றலைச் சேமிக்கும் அமைப்புகளை இந்நாட்டில் மேம்படுத்துவதற்கும் இவர்கள் எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டங்கள் தொடர்பாக அரசாங்கப் பிரதிநிதிகள் மற்றும் இலங்கையின் தனியார் துறை வர்த்தகர்களுடன் இவர்கள் உயர்மட்டக் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளனர். (அ)

# வவுனியாவில் நெல்லை உலர்த்தும் தளம் அமைக்க அடிக்கல் நடுகை!



வவுனியா, ஜூன். 03

தேசிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் "வளமான நாடு அழகான வாழ்க்கை" சமூக சக்தி வேலைத்திட்டத்தின் கீழ், வவுனியா கந்தபுரம் கிராமத்தில் நெல் உலர்த்தும் தளம் மற்றும் களஞ்சியசாலை அமைப்பதற் கான அடிக்கல் நாட்டு நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் நிதி ஒதுக்கீடு மற்றும் வழிகாட்டலின் கீழ் குறித்த தேசிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் மற்றும் வவுனியா பிரதேச செயலாளர் இ. பிரதாபன் ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகக் கலந்துகொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்தனர்.

இவ்விழாவில் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர், கிராம உத்தியோகத்தர், அரச அதிகாரிகள் மற்றும் கந்தபுரம் கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

# யாழ்.பல்கலையில் வெசாக்கூடு உடைப்பு; கோப்பாய் பொலிஸார் தீவிர விசாரணை

யாழ்ப்பாணம், ஜூன். 03

யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ பீட வளாகத்தினுள் அமைக்கப்பட்டிருந்த வெசாக் கூடு சேதமாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

வெசாக் பௌர்ணமி பண்டிகையை முன்னிட்டு சிங்கள மாணவர்களினால் பல்கலைக்கழக வளாகத்தினுள் வெசாக் கூடுகள் அமைக்கப்பட்டு, மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு அலங்கரிக்கப்பட்டிருந்த வெசாக் கூடுகளே கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இனந்தெரியாதோரால் சேதமாக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் பல்கலைக்கழக மாணவர்களினால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மாணவர்கள் வழங்கிய முறைப்பாட்டையடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற கோப்பாய் பொலிஸார் தடயங்களைச் சேகரித்துள்ளதுடன், வெசாக் கூடுகளைச் சேதப்படுத்திய நபர்களைக் கண்டறிவதற்காகத் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை பல்கலைக்கழக நிர்வாகமும் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்துள்ளது. (அ)

# கொள்கலன் போக்குவரத்து கட்டணங்களும் அதிகரிப்பு!

கொழும்பு, ஜூன். 03

நேற்று முன் தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் கொள்கலன் போக்குவரத்து கட்டணங்களை 5 வீதத்தினால் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகக் கொள்கலன் போக்குவரத்து வாகன உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே சங்கத்தின் தலைவர் சனத் மஞ்சுள இதனை உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் விலை திருத்தங்கள் காரணமாக, டீசல் விலை ஒட்டுமொத்தமாக சுமார் 25 ரூபாவினால் அதிகரித்துள்ளது.

எரிபொருள் விலை உயர்வுடன் இணைந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விலைகளும் கணிசமாக அதிகரித்துள்ளன. குறிப்பாக, போக்குவரத்துத் துறைக்கு அத்தியாவசியமான எஞ்சின் எண்ணெய், ரயர்கள் மற்றும் வாகன உதிரிப்பாகங்களின் விலைகள் மிக வேகமாக உயர்ந்துள்ளன.

நாட்டின் தற்போதைய பொருளாதார சூழ்நிலைக்கு மத்தியில் வாகனங்களுக்கான பராமரிப்புச் சேவைச் செலவுகள் பெருமளவில் அதிகரித்துள்ளன.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதித் துறையின் தொடர்ச்சியான செயல்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இந்த பாரவூர்திகளின் பராமரிப்புச் சேவைகளைச் சரியாகப் பேணுவது கட்டாயமானதாகும் எனச் சனத் மஞ்சுள சுட்டிக்காட்டினார். (அ)

# பல்கலைக்கழக மாணவர்களுக்காக 55 புதிய விடுதித் திட்டங்கள் ஆரம்பம்

கொழும்பு, ஜூன். 03

நாடளாவிய ரீதியில் உள்ள அரச பல்கலைக்கழகங்களில் சுமார் 16,000 மாணவர்களுக்கான தங்குமிட வசதிகளை மேம்படுத்தும் நோக்கில், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு 55 புதிய விடுதித் திட்டங்களை ஆரம்பித்துள்ளது.

மூன்று கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டத்தின் கீழ், 13 பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய உயர் கல்வி நிறுவனங்களில் புதிய விடுதிகள் கட்டப்படவுள்ளன.

சபரகமுவ மற்றும் ராஜரட்டை பல்கலைக்கழகங்களில் தலா 7 விடுதித் திட்டங்கள் மூலம் 2,200 மாணவர்களுக்கு தங்குமிட வசதிகள் வழங்கப்படவுள்ளன.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் 2,000 மாணவர்களுக்காக 6 விடுதிகள் அமைக்கப்படவுள்ளன.

கிழக்கு மற்றும் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகங்களில் முறையே 1,600 மற்றும் 1,800 மாணவர்களுக்கான வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

இவற்றுடன் சிறீ ஜயவர்தனபுர, வவுனியா, வயம்ப, யாழ்ப்பாணம், மொறட்டுவை, றுஹுணு, சம்பஹா விக்ரமாராச்சி ஆகிய பல்கலைக்கழகங்களும் திருகோணமலை வளாகமும் புதிய விடுதி வசதிகளைப் பெறவுள்ள நிறுவனங்களுள் அடங்குகின்றன.

இவற்றில் பெரும்பாலான திட்டங்கள் தற்போது விலைமனுகோரல், மதிப்பீடு அல்லது கொள்முதல் கட்டங்களில் இருப்பதுடன், றுஹுணு பல்கலைக்கழகம் உள்ளிட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட சில இடங்களில் முதற் கட்ட கட்டுமானப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# தேசிய மின் கட்டமைப்பில் ஸ்திரமின்மை; நிலையான தீர்வு எதுவும் எட்டப்படவில்லை

## மின் நுகர்வோர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன். 03

இலங்கையின் தேசிய மின் கட்டமைப்பில் புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களை ஒருங்கிணைப்பதில் நீண்டகாலத் தீர்வுகள் இதுவரை எட்டப்படவில்லை என மின் நுகர்வோர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

புதுப்பிக்கத்தக்க சக்தி இணைப்பின் காரணமாக கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாவது மின் கட்டமைப்பு ஸ்திரமின்மை பிரச்னை ஏற்பட்டிருந்தபோதிலும், ஒன்றரை ஆண்டுகள் கடந்தும் அதற்கு நிலையான தீர்வு எதுவும் காணப்படவில்லை என அச்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த மே 30ஆம் திகதி நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின் தடை, மின் கட்டமைப்பை நவீனமயமாக்குவதில் ஏற்பட்டுள்ள தோல்வியை வெளிப்படுத்துவதாகவும் அச்சங்கத்தின் பொதுச் செயலாளர் சஞ்சீவ தம்மிக்க தெரிவித்துள்ளார்.

மின் கட்டமைப்பின் நிலைத்தன்மையைப் பேணுவதற்காக மின்வெட்டை அமல்படுத்துவது அல்லது சூரிய சக்தி உற்பத்தியாளர்களின் கட்டமைப்புகளை தற்காலிகமாக முடக்குவது போன்ற குறுகியகால நடவடிக்கைகளையே அதிகாரிகள் நம்பியிருப்பதாக அவர் விமர்சித்துள்ளார்.

சூரிய சக்தி உற்பத்தியை கட்டுப்படுத்துவது எரிபொருள் அடிப்படையிலான மின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்து நாட்டுக்கு கூடுதல் செலவுகளை ஏற்படுத்தும் அபாயம் உள்ளதாகவும் அவர் எச்சரித்துள்ளார். (அ)

# "பிரஜா சக்தி" கிராமிய அபிவிருத்தி நேற்று நாடளாவிய ரீதியில் ஆரம்பம்

கொழும்பு, ஜூன். 03

நாடெங்கிலும் உள்ள பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில், "பிரஜா சக்தி" கிராமிய அபிவிருத்தித் திட்டம் நேற்று நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆயிரம் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் ஆயிரம் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் இலக்குடன் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுவதாக கிராமிய அபிவிருத்தி அமைச்சர் உபாலி பன்னிலகே தெரிவித்துள்ளார்.

நாட்டின் அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில், இந்த அபிவிருத்தித் திட்டங்கள் ஒரே நேரத்தில் ஒரே நாளில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல், அடிப்படை வசதிகளை விரிவுபடுத்துதல் மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தியை வலுப்படுத்துதல் ஆகியவற்றை பிரதான நோக்கங்களாகக் கொண்டு "பிரஜா சக்தி" திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக கிராம மட்டத்தில் முன்னுரிமை பெறும் அபிவிருத்தித் தேவைகளுக்கு தீர்வு வழங்கப்படுவதுடன், பிரதேச மக்களின் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்திற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

# தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்து மக்கள் கருத்து கோரல் ஆரம்பம்

கொழும்பு, ஜூன். 03

தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பாக பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பான சீர்திருத்தங்கள் குறித்தே பொதுமக்களிடம் கருத்துக்கள் கோரப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய, தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான தங்களது கருத்துக்கள், பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகளை எதிர்வரும் ஜூலை மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க முடியும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

தேர்தல் முறைமையை மேலும் ஜனநாயக ரீதியாகவும் திறனுள்ள வகையிலும் மேம்படுத்தும் நோக்கில் இந்த பொதுமக்கள் ஆலோசனைச் செயற்பாடு முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

Eelanadu ஈழநாடு

03.06.2026 புதன்கிழமை

பராபவ வருடம், வைகாசி 20

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**

– யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**

# மகிந்த தேசப்பிரியவின் யோசனை

ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) வின் தலைவரான ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க தான் தேசிய ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் தலைவரும். ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளராக ரில்வின் சில்வா இருக்கின்ற அதேவேளை, தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளராக மகிந்த மகிந்த அபேசிங்க இருக்கிறார்.

அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் செயற்பாடுகள் குறித்து சில்வா ஒருவிதமான "அதிகாரத் தொனியில்" கருத்துக்களை தெரிவிப்பதைப் போன்று அபேசிங்க தெரிவிப்பதில்லை. அத்துடன் தேசிய மக்கள் சக்தி கூட்டணியில் சுமார் 30 அரசியல் குழுக்கள், தொழிற் சங்கங்கள், மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் அங்கம் வகிப்பதாக கூறப்படுகின்ற போதிலும், ஜே.வி.பி. முக்கியஸ்தர்களினால் அரசாங்கம் தொடர்பான விவகாரங்களில் தன்முனைப்புடன் கருத்துக்களைக் கூறக்கூடியதாக இருப்பதைப் போன்று இந்த ஏனைய அங்கத்துவ அமைப்புக்களினால் முடிவதில்லை என்பதை நாம் நடைமுறை அனுபவத்தில் காண்கிறோம்.

ஆனால், மாகாணசபை தேர்தல்களை மேலும் தாமதிக்காமல் நடத்துவதற்கான வழிவகைகள் குறித்து ஆயாய்வதற்காக நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாட்டு இயக்கம் (பவ்ரல்) ஏற்பாடு செய்த கூட்டத்தில் மாகாணசபை தேர்தல்கள் தொடர்பில் ஜே.வி.பி. பொதுச் செயலாளரின் சர்ச்சைக்குரிய கருத்தொன்றை அபேசிங்க மறுதலித்ததை காணக்கூடியதாக இருந்தது.

மாகாண சபை தேர்தல்களை நடத்துவதற்காக இவ்வருட பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதி கடந்த வருட இறுதியில் நாட்டைத் தாக்கிய "டித்வா" சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் புனர்வாழ்வு அளிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டு விட்டதால் இந்த வருடம் தேர்தல்களை நடத்துவது சாத்தியமில்லை என்று யாழ்ப்பாணத்தில் சில்வா தெரிவித்த கருத்து குறித்து அந்த கூட்டத்தில் வைத்து சில அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அபேசிங்கவை நோக்கி கடுமையான கேள்விகளை தொடுத்தனர். அதற்கு பதிலளித்த அபேசிங்க மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்கு தேவையான பணம் அரசாங்கத்திடம் இருக்கிறது என்று கூறினார்.

அவரது பதிலுக்கு சில்வா இதுவரையில் பகிரங்கமாக பிரதிபலிப்பை வெளிக்காட்டியதாக செய்தி எதுவும் வெளியானதாக இல்லை. அரசாங்கம் ஜனாதிபதி செயலகத்தில் இருந்து அல்ல. பெலவத்தையில் (ஜே.வி.பி.யின் தலைமையகம் அமைந்திருக்கும் இடம்) இருந்தே வழிநடத்தப்படுகிறது என்று விமர்சனம் வெளிவருகின்ற அளவுக்கு அரசாங்கத்தின் அணுகுமுறைகளில் செல்வாக்கைச் செலுத்துகின்றவராக நோக்கப்படுகின்ற சில்வா கருத்தை அபேசிங்க மறுத்துப் பேசியது தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரியவை பெரிதும் கவர்ந்து விட்டது போன்று தெரிகிறது.

மாகாண சபைகளுக்கு எந்த தேர்தல் முறையில் தேர்தலை நடத்துவது என்பது குறித்து ஆராய்ந்துவரும் பாராளுமன்ற தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும் ஆளும் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களில் எவராவது அதிலிருந்து விலகி அந்த இடத்தை அபேசிங்கவுக்கு கொடுக்க வேண்டும் என்று தேசப்பிரிய யோசனை கூறியிருக்கிறார். அத்துடன் மாகாணசபை தேர்தல்களை விரைவாக நடத்த வேண்டும் என்பதில் அபேசிங்க அக்கறையுடையவராகவும் இது விடயத்தில் மற்றைய கட்சிகளின் அபிப்பிராயங்களை நன்கு அறிந்தவராகவும் அவர் இருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது என்றும் தேசப்பிரிய குறிப்பிட்டிருக்கிறார்.

கடந்த வாரம் செவ்வாய்க்கிழமை நடந்த அந்த கூட்டத்தில் அரசியல் கட்சிகளும் சிவில் சமூக அமைப்புகளும் மாகாணசபை தேர்தல்களை விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் நடத்த வேண்டும் என்று தீர்மானத்தை எடுத்திருந்தன. ஆனால், அந்த தீர்மானத்துடன் அபேசிங்க தன்னை அடையாளப்படுத்துவதை தவிர்த்துக் கொண்டார். அதற்கான காரணத்தை புரிந்து கொள்ள முடிகிறது.

பாராளுமன்ற தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் சகல உறுப்பினர்களையும் பவ்ரல் அமைப்பு அந்த கூட்டத்துக்கு அழைத்திருந்தது. ஆனால், தெரிவுக் குழுவில் எதிர்க் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் நான்கு உறுப்பினர்கள் மாத்திரமே அதில் கலந்து கொண்டார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த பத்துப் பேர் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும் நிலையில் ஒருவர் தானும் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

இதை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது மாகாணசபை தேர்தல்கள் தொடர்பில் தெரிவுக்குழுவில் பெரும்பான்மையான உறுப்பினர்களினால் எடுக்கப்படக்கூடிய தீர்மானத்தின் "இலட்சணத்தை" முன்கூட்டியே உணர்ந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது. அதனால், அபேசிங்க போன்று மாகாணசபை தேர்தல்களை மேலும் தாமதிக்கக்கூடாது என்று கருதுகின்ற சில ஆளும் கட்சி உறுப்பினர்கள் தெரிவுக் குழுவில் இருப்பது நல்லது. அதனால், தேர்தல்கள் ஆணைக்குழுவின் யோசனையை ஈழநாடு வரவேற்கிறது.

# ஐக்கிய அரபு இராச்சியம் ஏன் ஒபெக் மற்றும் ஒபெக் + அமைப்புகளிலிருந்து வெளியேறியது?

**இதுவரை நடந்தது;**

எம். கல்யாணராமன்




**(நேற்றைய தொடர்ச்சி)**

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இராச்சியத்தின் இந்த முடிவை வரவேற்றிருக்கிறார். இது எண்ணெய் விலையைக் குறைக்க உதவும் என்று அவர் நம்புகிறார்.

போர் தொடங்கியபோது, ஹார்முஸ் நீரிணை வழியாக நிறுத்தப்பட்ட 1.5 கோடி பீப்பாய்களில், சுமார் 45 இலட்சம் பீப்பாய்களை மீட்பதற்கு ஐக்கிய அரபு இராச்சியமும் சவூதி அரேபியாவும் மாற்று வழிகளைத் தேடின. சவூதி அரேபியா தனது "கிழக்கு-மேற்கு" குழாய் வழியைப் பயன்படுத்தி செங்கடல் துறைமுகமான யான்புவிற்கு எண்ணெயை அனுப்பியது.

இராச்சியம் தனது எண்ணெயை நீரிணைக்குக் கீழே உள்ள புஜைரா (Fujairah) துறைமுகத்திற்கு அனுப்பியது. புஜைரா தாக்குதல்களால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட போதிலும், போர் நடந்த காலத்தில் ஒரு நாளைக்கு 18 இலட்சம் பீப்பாய்கள் என்ற முழு கொள்ளளவுடன் செயல்பட்டது.

இராச்சியத்தின் கூடுதல் எண்ணெய் ஏற்றுமதிக்கு இது தொடர்ந்து முக்கிய வெளியேறும் புள்ளியாக இருக்கும்.

**போர் தொடங்கியபோது, ஹார்முஸ் நீரிணை வழியாக நிறுத்தப்பட்ட 1.5 கோடி பீப்பாய்களில், சுமார் 45 இலட்சம் பீப்பாய்களை மீட்பதற்கு ஐக்கிய அரபு இராச்சியமும் சவூதி அரேபியாவும் மாற்று வழிகளைத் தேடின. சவூதி அரேபியா தனது "கிழக்கு-மேற்கு" குழாய் வழியைப் பயன்படுத்தி செங்கடல் துறைமுகமான யான்புவிற்கு எண்ணெயை அனுப்பியது**

## ஒபெக் அமைப்பின் நிலை என்ன?

இதுவரை அங்கு எந்த பீதியும் இல்லை. ஒபெக் அமைப்பின் மற்றொரு முக்கிய உற்பத்தி நாடான ரஷ்யா, எண்ணெய் உற்பத்தி இலக்குகளில் சவூதி அரேபியாவுடன் இணக்கமாக உள்ளது. கட்டுபாடற்ற சந்தையில் தவிர்க்க முடியாத அதீத விலை ஏற்ற இறக்கங்களை இரு நாடுகளுமே விரும்பவில்லை. சந்தையை நிர்வகிக்கவே அவை விரும்புகின்றன.

கடந்த காலத்தில், அங்கோலாவும் கட்டாரும் இந்த அமைப்பிலிருந்து விலகின. ஆனால் அவை சிறிய நாடுகள் என்பது குறிப்பிடத்தக்கது. மாறாக, ஐக்கிய அரபு இராச்சியம் ஒபெக் அமைப்பின் மூன்றாவது பெரிய உற்பத்தி நாடாக இருந்தது. இருப்பினும், உற்பத்தியை அதிகப்படுத்துவது அண்டை நாடுகளுடனான உறவில் விரிசலை ஏற்படுத்தக்கூடும், அதை ஐக்கிய அரபு இராச்சியம் விரும்பாமல் இருக்கலாம்.

கஜகஸ்தான், அல்ஜீரியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் ஒபெக் அமைப்பிற்கான தங்களின் ஒருமைப்பாட்டை மீண்டும் உறுதி செய்திருக்கின்றன.

## இந்தியாவுக்கு இலாபமா?

அரபு நாடுகளிலேயே ஐக்கிய அரபு இராச்சியத்துடன் தான் இந்தியா அதிக நெருக்கமான உறவைக் கொண்டுள்ளது. "ட்ரூஷியல் ஸ்டேட்ஸ்" (Trucial States) ஆக இருந்த காலத்தில், இந்த இராச்சியங்கள் இந்தியாவில் இருந்த பிரிட்டிஷ் நிர்வாகத்தின் கீழ் இருந்தன, மேலும் அங்கு இந்திய ரூபாய் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

சுதந்திரத்திற்குப் பிறகு, இந்திய புலம் பெயர்ந்தோருக்கு ஐக்கிய அரபு இராச்சியம் ஒரு பெரிய வேலை வாய்ப்புத் தளமாக இருந்து வருகிறது. இராச்சியத்தின் மக்கள் தொகையில் சொந்த மக்கள் 10 சதவீதத்திற்கும் சற்றே அதிகமாக இருக்கும் நிலையில், அங்குள்ள வெளிநாட்டவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் இந்தியர்களாக உள்ளனர்.

சமீபகாலமாக, ஐக்கிய அரபு இராச்சியம் இந்தியாவுடனான பாதுகாப்பு உறவுகளையும் வலுப்படுத்தியுள்ளது. இராச்சியத்தின் அதிகரித்த உற்பத்தியால் உலகளாவிய எண்ணெய் விலை குறைந்தால், புஜைரா துறைமுகத்திலிருந்து வரும் கூடுதல் எண்ணெயை இந்தியா குறைந்த விலையில் பெற முடியும். இந்திய சுத்திகரிப்பு நிலையங்கள் இராச்சியத்தின் கச்சா எண்ணெயைச் சுத்திகரிக்க ஏற்றவை் எனவே இந்தியா நெகிழ்வுத்தன்மை கொண்ட நீண்டகால ஒப்பந்தங்களை மேற்கொள்ள முடியும்.

அபுதாபி தேசிய எண்ணெய் நிறுவனத்தில் உயர்மட்ட அதிகாரியாக நாற்பது வருடக்களுக்கு மேலாக பணியாற்றிய வி.ஆர். கிருஷ்ணசாமி, ஐக்கிய அரபு இராச்சியத்தில் இந்திய ரூபாய்க்கு இன்னும் தேவை இருப்பதாகக் குறிப்பிடுகிறார். மற்ற நாணயங்களில், குறிப்பாக "யுவான்" (Yuan) மூலம் பணம் செலுத்துவதற்கான அதிநவீன முறையை இராச்சியம் ஏற்படுத்தியுள்ளது. இதுவரை, உலகம் முழுவதும் எண்ணெய் வர்த்தகம் பெரும்பாலும் அமெரிக்க டொலர்களிலேயே நடக்கிறது, இது "பெட்ரோ-டாலர்" என்ற பிம்பத்தை வலுப்படுத்துகிறது.

"யுவான் மட்டுமல்ல, இந்தியா ரஷ்யாவிற்கும் சோவியத் யூனியனுக்கும் ரூபிள்களில் பணம் செலுத்தியதை நினைவுகூர்ந்தால், ஐக்கிய அரபு இராச்சியம் ரூபாய் போன்ற பிற நாணயங்களிலும் கொடுப்பனவுகளை ஏற்றுக் கொள்ளலாம்," என்று அவர் மேலும் கூறுகிறார்.

**(தி இந்து)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜூன் - 03 புதன்கிழமை
பராபவ வருடம் - வைகாசி 20
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : திரிதியை




**மேடம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். மரியாதைக் கூடும். புதிய பாதை தெரியும் நாள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்ன சின்ன கவலைகள் வந்து போகும். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

**மிதுனம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள்.தாயார் ஆதரித்து பேசுவார். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும்.

**கடகம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள். அமோகமான நாள்.

**சிம்மம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உறவினர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

**கன்னி**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். புதுவேலை கிடைக்கும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமையை கிடைக்கும்.

**துலாம்**
குடும்பத்தினருடன் கலந்து ஆலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும்.

**விருட்சிகம்**
கணவன் மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களை அதிகரிக்கும்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் ஈகோ பிரச்னை வந்து நீங்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. லேசாக தலை வலிக்கும். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரக்கூடும். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும்.

**கும்பம்**
உங்களின் இலக்கை நோக்கிமுன்னேறுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வீட்டை புதுப்பிக்க திட்டமிடுவீர்கள். பயணங்களால் பயனடைவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**மீனம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலைக்கு தகுந்தார் போல் பொறுப்பாக இருப்பார்கள். உத்தியோகத்தில் பாராட்டுவார்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

# செம்மணி புதைகுழி 3 ஆம் கட்ட அகழ்வு நடவடிக்கைகள் ஆரம்பம்

## கழுத்தில் தாயத்துடன் என்புக்கூடு மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன். 03

செம்மணி மனித புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளின் இரண்டாம் பகுதி அகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்போது கழுத்தில் காசு வடிவிலான தாயத்துடன் என்புக்கூடு ஒன்று அடையாளம் காணப்பட்ட நிலையில் அது அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி ஆரம்பமான நிலையில் மே மதம் 09ஆம் திகதி சனிக்கிழமை வரையில் 12 நாள்கள் பணிகள் தொடர்ச்சியாக நடைபெற்றன.

கடந்த 9ஆம் திகதியுடன் அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு நேற்று முன்தினம் திங்கள்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

இதன்போது கழுத்துப் பகுதியில் காசு வடிவிலான தாயத்துடன் ஒரு என்புக்கூடு அடையாளம் காணப்பட்ட நிலையில் அது முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டது.

அதேவேளை புதைகுழி பகுதிக்குள் செத்தல் தேங்காய் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. அத்துடன் மேலும் சில என்புக்கூடுகள் இனம் காணப்பட்டுள்ள நிலையில், அவற்றைச் சுத்தம் செய்து அடையாளப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி புதைகுழிக்குள் இருந்து இதுவரை கால பகுதியில் 262 மனித என்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவை அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஒரு கோடி 15 இலட்சம் ரூபா திருட்டு; இரு பிரதான சந்தேக நபர்கள் கைது!

யாழ்ப்பானம், ஜூன் 03

வல்வெட்டித்துறை கொம்மாந்துறைப் பகுதியிலுள்ள வீட்டொன்றில் ஒரு கோடி 15 லட்சம் ரூபா பணத்தைத் திருடிய குற்றச்சாட்டில் பிரதான சந்தேக நபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நெடுங்கேணியைச் சேர்ந்த மற்றொருவர் தலைமறைவாகியுள்ளார்.

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கமைய வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணையை துரிதப்படுத்தி சி.சி.ரி.வி. கமெராக்களை ஆராய்ந்ததில் குறித்த சந்தேக நபர்கள் சிக்கிக்கொண்டனர்.

கெருடாவிலைச் சேர்ந்த 16 வயதுச் சிறுவன், 19 வயது இளைஞன் ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 27ஆம் திகதி பகல் வேளையில் வீட்டில் ஆள்கள் இல்லாத நேரத்தில் வீட்டின் புகைக்கூட்டை உடைத்து உள்ளிறங்கிய இருவரும் இந்தத் திருட்டில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்களில் ஒருவர் வல்லைச் சந்தியிலும் மற்றொருவர் யாழ்ப்பாணம் ஆரியகுளம் பகுதியிலும் வைத்து கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளில் குறித்த சந்தேநபர்கள் வீட்டினுள் இறங்கிப் பணத்தை பார்த்துவிட்டு அதில் அதிக பணம் இருப்பதை நெடுங்கேணியில் உள்ளவரிடம் வீடியோ அழைப்பு மேற்கொண்டு தெரிவித்துள்ளனர். அவர் அதற்கு முழுப்பணத்தையும் எடுத்துவரும்படி கூறியுள்ளனர்.

அவர்கள் அந்தப் பணத்தை நெடுங்கேணிக்கு எடுத்துச் சென்று அங்கு காணியொன்றில் புதைத்து வைத்துவிட்டு இருவரும் யாழ்ப்பாணம் வந்தபோதே சந்தேகநபர்கள் கைதாகியுள்ளனர்.

அதனையடுத்து பொலிஸார் நெடுங்கேணியைச் சேர்ந்த நபரை கைது செய்ய சென்றபோது அவர் தலைமறைவாகியுள்ளார்.

மேலதிக விசாரணைகளுக்கமைய சந்தேக நபர்களிடமிருந்து 74 லட்சம் ரூபா மீட்கப்பட்டுள்ளது.

நீதிமன்று அனுமதி பெற்று சந்தேக நபர்களை தடுப்புக்காவலில் வைத்து விசாரரணை செய்ய வல்வெட்டித்துறை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

# நயினாதீவின் நன்னீர்வளம் பற்றிய ஆராய மூன்று நாள் களப் பயணம்

யாழ்ப்பாணம், ஜூன். 03

நயினாதீவின் நன்னீர்வளம் பற்றிய முதற்கட்ட பார்வையிடலை நோக்கமாகக் கொண்ட மூன்று நாள் களப் பயணம் இளம் நீர்வாண்மையாளர் வடக்கு வட்டத்தினரால் முன்னெடுக்கப்பட்டது.

திட்ட ஒருங்கிணைப்பாளரும், சூழலியல் பேராசிரியருமான நடராஜா சிறிஸ்கந்தராஜா தலைமையில் நீரியல் ஆய்வினைப் பயில்வோர், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் நீர்வள மாணவர்களும் இணைந்து களப் பயணத்தை மேற்கொண்டனர்.

நயினாதீவில் தொடர்ந்தும் பல ஆண்டுகளாக உள்ள பாரம்பரிய கிணறுகள், குளங்கள் உள்ளிட்ட நீர்நிலைகளின் அமைவிடம், பரம்பல், பயன்பாடு நேரடியாக பார்வையிடப்பட்டு தண்ணீரின் தரம், உப்புச் செறிவு, உவர்நீராதல் நிலைமை உள்ளிட்ட பல விடயங்கள் விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்து கண்டறிந்ததோடு அங்குவாழ்ந்து வரும் மக்களின் கருத்துகளையும் கேட்டறிந்து கொண்டனர்.

குறித்த பயணம் தொடர்பில் எதிர்வரும் வியாழக்கிழமை வரை இடம்பெற உள்ள வடக்கின் இளம் நீர்வாண்மையாளர் வட்டத்தின் வாராந்த இணைய வழி உரையாடல் நிகழ்வில் பங்கேற்று பல்வேறு தகவல்களையும் அறிந்து கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வடமராட்சி கிழக்கு பெண்கள் அணி சம்பியன்!



யாழ்ப்பாணம், ஜூன். 03

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடத்தப்பட்டு வரும் நடப்பு ஆண்டுக்கான விளையாட்டு விழாவில், யாழ். மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் பெண்களுக்கான எல்லே போட்டியில் வடமராட்சி கிழக்கு பிரதேச இளைஞர் கழக பெண்கள் அணி முதலிடத்தைப் பெற்று சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

இப்போட்டியில் வடமராட்சி கிழக்கு பிரதேச சம்மேளனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி, மணற்காடு சென். அன்ரனிஸ் இளைஞர் கழகம் மிகச்சிறப்பான முறையில் அணியை ஒழுங்கமைத்து இந்த வெற்றியைத் பெற்றுள்ளது.

மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்த வடமராட்சி கிழக்கு பிரதேச பெண்கள் அணி வீரர்களுக்கும், அணியை வழிநடத்திய மணற்காடு சென். அன்ரனிஸ் இளைஞர் கழகத்தினருக்கும் பிரதேச மக்கள் மற்றும் விளையாட்டு ஆர்வலர்கள் தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலங்கையின் பணவீக்கம் 7 வீதம்வரை உயரக்கூடும்!

## மத்திய வங்கி ஆளுநர் எச்சரிக்கை



கொழும்பு, ஜூன். 01

மத்திய கிழக்கில் தொடரும் மோதல் மற்றும் அதிகரித்து வரும் உலகளாவிய எரிபொருள் விலைகள் காரணமாக நாட்டின் பணவீக்க விகிதம் 7 வீதமாக அதிகரிக்கக்கூடும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க எச்சரித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இந்த விடயத்தை தெளிவுபடுத்தினார்.

இது தொடர்பில் இதன் போது மேலும் கருத்து வெளியிட்ட மத்திய வங்கி ஆளுநர்,

மத்திய கிழக்கு மோதல் ஆரம்பத்தில் குறுகிய காலத்தில் தீர்க்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும், அதன் நீடித்த காலம் இலங்கையின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க பின்விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

எரிபொருள் விலைகள் தொடர்ந்து உயர்ந்து வருவதால், பணவீக்கத்தின் மீது மேல்நோக்கிய அழுத்தம் ஏற்பட்டுள்ளது.

தற்போது சுமார் 5.4 வீதம் முதல் 5.5 வீதம் வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ள பணவீக்கம், தற்போதைய போக்குகள் தொடர்ந்தால் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

எரிபொருள் விலைகள் தொடர்ந்து அதிகரித்து வருவதை நாங்கள் கவனித்து வருகிறோம், அதே நேரத்தில் நுகர்வோர் தேவையில் குறிப்பிடத்தக்க சரிவு எதுவும் ஏற்படவில்லை.

எனவே, இந்த நிலைமைகள் தொடர்ந்தால், பணவீக்கம் 5 சதவீதத்தைத் தாண்டி 7 வீதத்தைக்கூட எட்டும் அபாயம் உள்ளது.

பணவீக்க அழுத்தங்களைக் கட்டுப்படுத்தும் ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மத்திய வங்கி அண்மையில் தனது பணவியல் கொள்கையைக் கடுமையாக்கியுள்ளது.

பணவீக்கம் மேலும் அதிகரிப்பதைத் தடுக்கவும், பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பேணவும், வரும் மாதங்களில் தேவையைக் குறைப்பது அவசியமாகும்.

இதற்கிடையில், சட்டபூர்வமாக ஈட்டப்பட்ட நிதிகளை இலங்கைக்கு முறைசார்ந்த வங்கி அமைப்பின் மூலம் அனுப்புவதற்கு எவ்வித கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை.

அந்த வகையில், சட்டபூர்வமான வழிகளில் ஈட்டப்பட்ட எந்தவொரு பணமும், நாட்டின் பணமோசடி தடுப்பு விதிமுறைகளுக்கு இணங்கும் பட்சத்தில், இலங்கைக்கு சிரமமின்றி அனுப்பப்படலாம்.

இருப்பினும், சட்டவிரோதமான வழிகளில் பெறப்பட்ட நிதிகள் சட்ட மற்றும் ஒழுங்கு முறைத் தடைகளை எதிர்கொள்ளும்-என்றார்.

(அ)

# பெண்கள் தேசிய ஆணைக்குழுவின் புதிய தலைவராக கிரேஸ் ஆசிர்வாதம்



கொழும்பு, ஜூன். 03

அரசியலமைப்புச் சபையின் பரிந்துரைக்கு இணங்க, ஓய்வு பெற்ற தூதுவர் கிரேஸ் ஆசிர்வாதத்தை பெண்கள் தேசிய ஆணைக்குழுவின் புதிய தலைவராக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நியமித்துள்ளார்.

பெண்களின் உரிமைகளை மேம்படுத்துதல், பாதுகாப்பு வழங்குதல் மற்றும் பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்தும் நோக்கில், 2024ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க பெண்கள் அதிகாரமளித்தல் சட்டத்தின் கீழ் இந்த ஆணைக்குழு நிறுவப்பட்டுள்ளது.

2025 செப்ரெம்பர் மாதம் முறையாக அமைக்கப்பட்ட இந்த பெண்கள் தேசிய ஆணைக்குழு தற்போது தனது நிறுவன கட்டமைப்பு, மனிதவளம் மற்றும் டிஜிற்றல் உள்கட்டமைப்புகளை மேம்படுத்தும் பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள கிரேஸ் ஆசிர்வாதம், நேபாளம், நெதர்லாந்து, பெல்ஜியம் மற்றும் லக்ஸம்பர்க் ஆகிய நாடுகளுக்கான தூதுவராகவும், ஐரோப்பிய ஒன்றியத்திற்கான தூதரகத் தலைவராகவும் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். மேலும், இரசாயன ஆயுதத் தடைக்கான சர்வதேச அமைப்பின் பிரதிப் பொது இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார்.

இவருடன், ஷெரின் சரூர், ஜனகா செல்வராஸ், ஜெயந்தி குரு-உதும்பாலா, கலாநிதி பத்மா குணரத்ன, கலாநிதி கலண சேனாரத்ன மற்றும் எம். யு. கயானி ஆகியோர் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாகவும், கே.டி.ஆர். ஓல்கா நிறைவேற்று இயக்குநராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(அ)

# நீர்வெறுப்பு நோயை கட்டுப்படுத்த மட்டும் ஆண்டுதோறும் 5 பில்லியன் ரூபா செலவு!

கொழும்பு, ஜூன். 03

நீர்வெறுப்பு நோயைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் ஆண்டுதோறும் 5 பில்லியன் ரூபாவிற்கும் அதிகமான தொகையைச் செலவிடுவதாக தேசிய நீர்வெறுப்பு நோய் ஒழிப்புத் திட்டம் தெரிவித்துள்ளது.

2030 ஆம் ஆண்டளவில் இலங்கையில் நீர்வெறுப்பு நோய் தொடர்பான மரணங்களை முற்றாக ஒழிப்பதற்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் வைத்தியர் நிரோஷன் கமகே தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி பிரதேசத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர் காணப்பட்ட நீர்வெறுப்பு நோய் மரணங்களின் எண்ணிக்கையை விட, கடந்த ஆண்டுகளில் அந்த எண்ணிக்கை மிக வேகமாக வீழ்ச்சியடைந்துள்ளது. 2025 ஆம் ஆண்டில் இலங்கையில் 14 நீர்வெறுப்பு நோய் மரணங்கள் பதிவாகியுள்ளன. 2030 ஆம் ஆண்டில் இந்த மரணங்களை பூச்சியமாக்கி, எவரும் உயிரிழக்காத நாடாக இலங்கையை உருவாக்குவதே எமது இலக்காகும். 2024 ஆம் ஆண்டில் மொத்த மரணங்களின் எண்ணிக்கை 20 ஆக இருந்தது. இந்த ஆண்டின் முதல் காலாண்டில் 3 மரணங்கள் பதிவாகியுள்ளன.

மக்களுக்கான தடுப்பூசிகளுக்காக மாத்திரம் அரசாங்கம் ஆண்டுக்கு சுமார் 800 மில்லியன் ரூபாவைச் செலவிடுகிறது. நாய்கள் மற்றும் ஏனைய விலங்குகளுக்கான தடுப்பூசிகளுக்காக சுமார் 2.5 பில்லியன் ரூபா செலவிடப்படுகிறது. ஒட்டுமொத்தமாக நீர்வெறுப்பு நோயைக் கட்டுப்படுத்த அரசாங்கம் ஆண்டுக்கு சுமார் 5 பில்லியன் ரூபாவைச் செலவிடுகிறது-என்றார்.

(அ)

# டெங்கு நோய் தொற்றினால் இந்த ஆண்டு 19 மரணங்கள்!

கொழும்பு, ஜூன். 03

இந்த ஆண்டில் இதுவரை இலங்கை முழுவதும் மொத்தம் 33,572 டெங்கு பாதிப்புகளும் 19 உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

சமூக சுகாதார நிபுணர் வைத்தியர் துஷானி தாபரேவின் கூற்றுப்படி,

மே மாதத்தில் மட்டும் 8,321 டெங்கு நோய்த்தொற்றுகள் பதிவாகியுள்ளன.

இதில் கொழும்பு, கம்பஹா மற்றும் குருநாகல் மாவட்டங்களில் அதிகபட்ச எண்ணிக்கைகள் பதிவாகியுள்ளன.

டெங்கு பரவுவதற்கான அதிக அபாயமுள்ள பகுதிகளாக 72 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு பதிவான மொத்த டெங்கு பாதிப்புகளில் கிட்டத்தட்ட 50 வீதம் மேற்கு மாகாணத்திலும், 16 வீதம் தெற்கு மாகாணத்திலும், 9 வீதம் சப்ரகமுவ மாகாணத்திலும் பதிவாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மீனவர்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டும்

## ஹரீஸ் வலியுறுத்தல்

அம்பாறை, ஜூன். 03

கிழக்கு மாகாணத்தில், குறிப்பாக அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் கடுமையான பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகி வருவதாகவும், அவர்களது மீன்கள், மீன்பிடி வலைகள் மற்றும் பிற உடமைகள் கடலில் வைத்து திட்டமிட்ட முறையில் கொள்ளையிடப்படுவதாகவும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக அவரது கல்முனை அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அவர், பல ஆண்டுகளாக கடலையே வாழ்வாதாரமாகக் கொண்டு வாழும் அம்பாறை மாவட்ட மீனவர்கள் தற்போது பாதுகாப்பற்ற சூழ்நிலையை எதிர்கொண்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

மேலும், இந்த கொள்ளைச் சம்பவங்களின் பின்னணியில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி என்பவர் தலைமையிலான குழுவொன்று செயற்பட்டு வருவதாக மீனவர்களிடமிருந்து தொடர்ச்சியான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்தார். குறித்த நபர் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் செயற்பாட்டாளராகவும் இருப்பதாகப் பரவலாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

இவ்வாறான குற்றச்செயல்கள் தொடர்ந்தும் இடம்பெறுவது மீனவர்களின் பொருளாதாரத்தை மட்டுமல்லாது, அவர்களது வாழ்வாதாரத்தையே கடுமையாக பாதித்து வருவதாகவும் ஹரீஸ் சுட்டிக்காட்டினார். தமது உழைப்பின் பலனை இழந்து வரும் மீனவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

எனவே, இந்த விவகாரம் தொடர்பில் கடற்படை, பொலிஸார், மீன்பிடித் திணைக்களம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக விசாரணைகளை முன்னெடுத்து உண்மையான குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார். (அ)

# கதிர்காமத்தில் கன்னிக்கால் நாட்டல்!



அம்பாறை, ஜூன். 03

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமக் கந்தன் ஆலயத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க வருடாந்த ஆடிவேல் பெருவிழாவின் முதன்மை மற்றும் தனிச்சிறப்புமிக்க சடங்கான கன்னிக்கால் நடும் வைபவம் நேற்று முன்தினம் திங்கள் கிழமை அதிகாலை கதிர்காமக் கந்தனின் சந்நிதியில் இடம்பெற்றது.

நேற்று முன் தினம் ஆரம்பமாகிய இந்தப் புனித விழாக்காலம் அடுத்துவரும் 45 நாள்களில் பக்திப் பேரொளியினாலும் பக்தர்களின் அரோகரா கோஷங்களினாலும் திருத்தலத்தை திகழச் செய்யவுள்ளது.

எதிர்வரும் ஜூலை 15 ஆம் திகதி கொடியேற்றத்துடன் தொடங்கி 29 ஆம் திகதி தீர்த்தம் வரை கதிர்காமக் கந்தனின் ஆடிவேல் பெருவிழா கோலாகலமாகவும் ஆன்மிகச் செழுமையுடனும் நடைபெறவுள்ளது. (அ)

# சிறப்பாக நடைபெற்றது அம்மனின் வைகாசி சடங்கு!



அம்பாறை, ஜூன். 03

வரலாற்று பிரசித்திபெற்ற காரைதீவு கண்ணகை அம்மனின் திருக்குளிர்த்தி சடங்கு நேற்று செவ்வாய்க் கிழமை அதிகாலை பக்தி பூர்வமாக உணர்வோடு நடைபெற்றது.

ஆயிரமாயிரம் பக்தர்கள் அந்த அதிகாலை வேளையில் வந்து கலந்து கொண்டனர்.

சரியாக 4 மணியளவில் ஆரம்பித்த சடங்கு கிரியைகள் பூசைகள் யாவும் 5 மணிக்கு குளிர்த்தி பாடுதலுடன் நிறைவுற்றன.

பிள்ளைகள் விற்று வாங்கும் நிகழ்வும் நடைபெற்றது.

கடந்த திங்களன்று கடல்நீர் எடுத்துவந்து கல்யாணக்கால் நடலுடன் இச் சடங்கு ஆரம்பித்தது.

எதிர்வரும் 08ஆம் திகதி மாலை பொங்கலுடன் கூடிய எட்டாம் சடங்கு நிகழ்வுடன் நிறைவடையவிருக்கிறது. (அ)

# கடற்பரப்புகளில் காற்றின்வேகம் குறித்து எச்சரிக்கை

கொழும்பு, ஜூன். 03

முல்லைத்தீவு முதல் பொத்துவில் வரை உள்ள கடற்பகுதிகளுக்காக வளிமண்டலவியல் திணைக்களம் விசேட கடல் எச்சரிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இந்த அறிவித்தல் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு வெளியிடப்பட்டதுடன், இன்று முற்பகல் 10.30 மணி வரை செல்லுபடியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, குறிப்பிட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகம் அவ்வப்போது மணித்தியாலத்திற்கு 50 முதல் 60 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடும் எனவும், கடல் நிலை கொந்தளிப்பாக காணப்படும் வாய்ப்பு இருப்பதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

எனவே, அந்தப் பகுதிகளில் மீன்பிடி மற்றும் கடல்சார் பணிகளில் ஈடுபடும்வர்கள் மிகுந்த அவதானத்துடன் செயல்படுமாறு திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (அ)

# பொருளாதார வீழ்ச்சியை தடுக்க தவறியுள்ளது அநுரகுமார அரசு!

## ராஜித சேனாரத்ன குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன். 03

அரசாங்கத்தினால் கட்டுப்படுத்த முடியாத வகையில் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து செல்கிறது. அரசாங்கத்தின் இயலாமையே இதற்கு காரணமாகும். அன்று ரணில் விக்கிரமசிங்க நாட்டை பொறுப்பேற்கும்போது இதனைவிட பாரிய பொருளாதார நெருக்கடி நிலைமை இருந்தது. என்றாலும் இரண்டு வருடங்களில் நாட்டை மீள கட்டியெழுப்ப அவர் நடவடிக்கை எடுத்தார் என முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் காரியாலயத்தில் கூட்டு எதிர்கட்சி நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அனைத்து வகையான நெருக்கடிகளையுமே அன்று ரணில் விக்கிரமசிங்க எதிர்கொண்டார். அத்தகையதொரு நெருக்கடியைக் கையில் எடுத்து, இரண்டு ஆண்டுகள் செல்லும்போது அனைத்துப் பொருளாதாரக் சுட்டிகளையும் மேம்படுத்த முடிந்ததென்றால், அவ்வாறு மேம்படுத்தப்பட்டுள்ள சுட்டிகள் மத்திய கிழக்கு போர் ஒன்று வந்ததனால், இந்த ஒரேயொரு காரணத்திற்காக எவ்வாறு சரிந்து விழ முடியும்?

அன்று இலங்கைபஞ்சம் மற்றும் நோயால் சீரழிந்த நகரம் போல இருந்தது. இந்நாட்டில் எதுவும் இருக்கவில்லை. மக்கள் நான்கு, ஐந்து கிலோமீற்றர் வரிசைகளில் நின்றுகொண்டிருந்தார்கள். வாகனங்கள் மற்றும் மக்கள் வரிசைகளில் இருந்தார்கள். அப்படியொரு அராஜக நிலை இந்நாட்டில் ஏற்பட்டிருந்தது. திறைசேரியின் வெளிநாட்டு நாணய இருப்பு 20 மில்லியன் டொலர்கள் வரை சரிந்து வீழ்ந்திருந்தது. எதுவும் இருக்கவில்லை, பொருள்களைக் கொண்டுவரப் பணமில்லை, மக்களுக்கு உணவளிக்கப் பண மில்லை, எதுவுமே இல்லாத ஒரு நாட்டில் அன்று இதனை எவ்வாறு எதிர்கொண்டார்கள்?

அன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்நாட்டைப் பொறுப்பேற்கும்போது பொருளாதார வளர்ச்சி வீதம் மறை 17.2 ஆக வீழ்ச்சியடைந்திருந்தது. அதாவது பொருளாதார வளர்ச்சி அல்ல, பொருளாதாரம் மறை 17.2 வீத வேகத்தில் வீழ்ச்சியடைந்து கொண்டிருந்தது.

அவர் அதனைப் பொறுப்பேற்று 2024 ஆம் ஆண்டாகும் போது, இந்த மறைப் பெறுமானத்தை நேர் 5.3 வீத பொருளாதார வளர்ச்சி வேகத்திற்கு கொண்டுவந்தார். அதாவது இரண்டு வருடங்களுக்குள் பொருளாதாரத்தை 22.5வீதத்தால் மேம்படுத்தினார். இதனால்தான் கலாநிதி டொனால்ட் லூ இதனைப் பொருளாதாரத்தின் ஒரு "அதிசயம்" என்று கூறினார்.

அவ்வாறு மீளெழுச்சி பெற்ற நாட்டில், இந்த மத்திய கிழக்கு நெருக்கடி வந்துவிட்டது என்று கூறி, ஏதோ ஒரு இடத்தில் இருக்கும் நெருக்கடியைக் காட்டி, இப்போது பொருளாதாரம் 3 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. பொருளாதாரம் குறைகிறது என்றால் இந்நாட்டில் எந்தவொரு அபிவிருத்தியும் இல்லை என்று அர்த்தம்-என்றார். (அ)

# தனிமையில் வாழும் முதியவர்களின் பாதுகாப்பு தொடர்பில் விழிப்புணர்வு

கொழும்பு, ஜூன். 03

தனிமையில் வாழும் முதியவர்கள் மற்றும் வயோதிப பெற்றோர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது, தற்போதைய சூழ்நிலையில் மிகவும் உணர்வுபூர்வமான மற்றும் அத்தியாவசியமான பொறுப்பாகும் என பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பிள்ளைகள் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்கு அல்லது வெளிப்பகுதிகளுக்குச் சென்றுள்ளதால், நாட்டில் பல முதியவர்கள் தனிமையில் வாழவேண்டிய நிலை உருவாகியுள்ளது. இதன் காரணமாக, அவர்கள் பல்வேறு ஆபத்துகளுக்குள்ளாகும் சம்பவங்கள் அண்மைக் காலமாகப் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறிப்பாக, போதைப்பொருளுக்கு அடிமையான சிலர் பணம் மற்றும் தங்க நகைகளை கொள்ளையிடும் நோக்கில், இவ்வாறான தனிமைப்படுத்தப்பட்ட வீடுகளை இலக்கு வைக்கின்றனர். சில சந்தர்ப்பங்களில் கொலைகள் கூட அரங்கேறியுள்ளதாக பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

முதியவர்களின் பாதுகாப்பிற்காகப் பின்பற்றவேண்டிய அறிவுறுத்தல்கள் சிலவற்றை பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ளது.

முதியவர்கள் வாழும் வீடுகள் தொடர்பாக பொதுமக்கள் கூடுதல் அவதானம் செலுத்தவேண்டும் என பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அதன்படி, வீட்டைச் சுற்றியுள்ள பகுதிகளில் இரவு நேரங்களில் போதுமான வெளிச்சம் கிடைக்கும் வகையில் மின்விளக்குகள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

அறிமுகமற்ற அல்லது நம்பகத்தன்மை உறுதிப்படுத்தப்படாத நபர்களை எந்தவொரு பணிக்காகவும் வீட்டிற்குள் அனுமதிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

அயலவர்களுடன் நல்லுறவைப் பேணுவதன் மூலம் பரஸ்பர பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

தனிமையில் வாழும் முதியவர்கள் தொடர்பான தகவல்களை கிராம உத்தியோகத்தர் மற்றும் சமூகப் பொலிஸ் குழுவினருக்கு அறிவித்து, அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## யாழ்.மக்களுக்கான...

தெரிவித்ததுடன், இந்தப் பகுதி மக்களுக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்றிட்டங்களை மிகவும் மகிழ்ச்சியுடன் நடைமுறைப்படுத்துவதாக குறிப்பிட்டார்.

மன்னார் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவு அபிவிருத்தி, முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் அபிவிருத்தி,

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி உள்ளிட்ட முக்கிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும், தனது உரையில் நினைவு கூர்ந்தார்.

இந்த நிகழ்வில், வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், யாழ்ப்பாண இந்தியத் துணைத் தூதரகத்தின் கொன்சியூலர் ஜெனரல் சாய் முரளி, தூதரக அதிகாரிகள், ஆலய நிர்வாகத்தினர், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

## வடக்கு மக்களுக்காக...

இந்தியாவுக்கு வடக்கு மக்கள் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன், என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேத நாயகன் தெரிவித்தார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய வளாகத்தில் இந்திய அரசாங்கத்தின் விசேட நிதியுதவியின் கீழ் அமைக்கப்பட்ட நீர் சுத்திகரிப்பு நிலையத்தைப் பொதுமக்களின் பயன்பாட்டுக்காகக் கையளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஆளுநர் நா.வேதநாயகன் மேலும் குறிப்பிடுகையில்,

'வரலாற்று ஆய்வாளர்களும், சுற்றுலாவிகளும் பெருமளவில் வருகைதரும் புகழ்பெற்ற பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான வரலாற்றுச் சிறப்புமிக்க நகுலேஸ்வரம் ஆலயம் இங்கு அமைந்துள்ளது. இந்தியாவிலிருந்து வந்த மருதப்புரவல்லி இளவரசி, இங்குள்ள புனித தீர்த்தத்தில் (கீரிமலை ஊற்று) நீராடி தன் குறை நீங்கி, மாவிட்டபுரம் ஆலயத்தை எழுப்பி வழிபாட்டை நிலை நிறுத்தினார் என்று வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. இத்தகைய மிக நீண்ட பண்டைய வரலாற்றையும் புகழ்பெற்ற புனித தீர்த்தத்தையும் கொண்ட இந்த ஆலயத்துக்குக் கடந்த 2015ஆம் ஆண்டு பாரதப் பிரதமர் நரேந்திர மோடி யாழ்ப்பாணம் வந்திருந்தபோது வருகை தந்திருந்தார்.

இந்திய அரசு வடமாகாண மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காகவும் ஏனைய வளர்ச்சித் திட்டங்களுக்காகவும் தொடர்ந்து தனது ஆதரவை வழங்கி வருகின்றது. வடமாகாணத்தில் உள்ள மிகவும் நலிவடைந்த பிரிவினருக்கு வழங்கப்பட்ட இந்திய வீட்டு வசதித் திட்டத்தை நாம் எப்போதும் நன்றியோடு நினைவு கூர்வோம். இதன் மூலம் இன்று பல குடும்பங்கள் நல்ல உறுதியான வீடுகளில் பாதுகாப்பாக வாழ முடிகின்றன. நான் அந்தக் காலகட்டத்தில் முல்லைத் தீவில் மாவட்டச் செயலாளராகப் பணியாற்றியதால் இதனை நேரில் கண்டு நன்கு அறிவேன். இந்திய அரசின் இந்த மகத்தான பங்களிப்பை வடபகுதி மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள்.

இதுமட்டுமன்றி, ரயில்வே மறுசீரமைப்புத் திட்டம் மற்றும் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மன்னார் மருத்துவமனை மேம்பாட்டுத் திட்டம் போன்ற பல திட்டங்கள் இந்தியாவின் பங்களிப்போடு நடந்துள்ளன. மேலும் சில மருத்துவமனைத் திட்டங்கள் தற்பொழுது பரிசீலனையில் உள்ளன.

கடல் அலைகளுக்கு மிக அருகில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க நகுலேஸ்வரம் ஆலயத்தின் குடிதண்ணீர்த் தேவைக்கு உங்களது ஆதரவு மற்றும் அர்ப்பணிப்பு மிகவும் பாராட்டுக்குரியது. இந்த வரலாற்றுப் பூமியின் மேம்பாட்டுக்காக உதவும் இந்தியாவுக்கு, வடமாகாண மக்கள் சார்பாக எங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்-என்றார். (அ)

## 10 நகரங்களுக்கு...

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுக்கு இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, அநுராதபுரம், கதிர்காமம், கொழும்பு மற்றும் கண்டி ஆகிய நகரங்களின் தனித்துவத்தை வெளிப்படுத்தும் வகையில், பொருத்தமான ஆலோசனை சேவை நிறுவனமொன்றின் ஆய்வுக்கு அமைய இந்த வர்த்தகநாமப்படுத்தும் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்காக 2026ஆம் ஆண்டில் மாத்திரம் 325 மில்லியன் ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, நகர அபிவிருத்தித் துறையில் முறையான மற்றும் தரவுகள் அடிப்படையிலான அணுகுமுறையை ஊக்குவிக்கும் நோக்கில், 10 நகரங்களை அபிவிருத்தி செய்யும் திட்டமும் 2026 வரவு-செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம், மாத்தளை, ஹற்றன், மட்டக்களப்பு, சிலாபம், தம்புத்தேகம, வவுனியா, எஹலியகொட, பதுளை மற்றும் மாத்தறை ஆகிய 10 நகரங்களில் கண்டறியப்பட்டுள்ள 217 முன்னுரிமைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி, நகர வர்த்தகநாமப்படுத்தும் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியில் எஞ்சியுள்ள 975 மில்லியன் ரூபாயும், ஹற்றன் மற்றும் மாத்தளை நகரங்களின் அபிவிருத்திக்காக ஏற்கனவே ஒதுக்கப்பட்டிருந்த 500 மில்லியன் ரூபாயும் இதற்காகப் பயன்படுத்தப்படவுள்ளன.

இதற்கமைய, மொத்தம் 1,475 மில்லியன் ரூபாய் நிதியைக் கொண்டு, இந்த 10 நகரங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ள திட்டங்களை 2026ஆம் ஆண்டுக்குள் விரைவாக நடைமுறைப்படுத்துவதற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

## செம்மணி புதைகுழியில்...

காணப்பட்ட நிலையில் அது முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டது.

மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் நேற்று செவ்வாய்க்கிழமையுடன் 14 நாள்கள் நடைபெற்ற நிலையில், 30 என்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 27 என்புக்கூடுகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, செம்மணிப் புதைகுழிக்குள் இருந்து இதுவரையிலான காலப் பகுதியில் 270 மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவற்றில் 267 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஒட்டுமொத்த சுமையையும்...

அவசியமானது என்றும் வலியுறுத்தினார்.

கொழும்பில் உள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்கிழமை நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

திறைசேரி முழு சுமையையும் தாங்கிக் கொண்டால் மீண்டும் மக்கள் மீதே வரி விதிக்க வேண்டி வரும். அதனால்தான் திறைசேரி ஒரு பகுதியைத் தாங்கிக்கொள்ள, எஞ்சிய பகுதியை விலை அதிகரிப்பு மூலம் ஈடுசெய்ய வேண்டியதாயிற்று. ஆனாலும், அரசாங்கம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எரிபொருள் விநியோகத்தைக் குறைக்கவோ அல்லது கட்டுப்படுத்தவோ இல்லை.

நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டுமாயின் திறைசேரி, நிறுவனங்கள் மற்றும் மக்கள் ஆகிய மூன்று தரப்பும் இந்தச் சுமையைப் பகிர்ந்துகொள்ள வேண்டியுள்ளது. ஒருவேளை இந்த விலை அதிகரிப்பைச் செய்யாவிட்டால், நிறுவனங்கள் எரிபொருள் இறக்குமதி செய்வதை நிறுத்திவிடும், இதனால் விநியோகம் முற்றாகப் பாதிக்கப்பட்டு ஒட்டுமொத்த பொருளாதாரமும் சீர்குலைந்துவிடும்.

தரம் குறைந்த நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டதால் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்யவே எரிபொருள் விலை உயர்த்தப்பட்டதாக எதிர்க்கட்சிகள் கூறும் குற்றச்சாட்டில் உண்மையில்லை. நிலக்கரியின் தரம் குறைந்த விவகாரத்தில் மக்கள் மீது நாம் எந்தவொரு சுமையையும் சுமத்தவில்லை. தரம் குறைந்த நிலக்கரியைக் கொண்டு வந்த கப்பல்களுக்கு எதிராக சட்டத்துக்கமைய அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அத்தோடு டொலர் கொடுப்பனவுகளும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன- என்றார். (அ)

## அச்சுவேலி ...

இந்த விஜயத்தின்போது, இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜாவுடன், யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி, தூதரக அதிகாரிகளும் உடனிருந்தனர். (அ)

## யாழில் பாடகர்...

வைத்து யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட பாடகர் சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

தற்போது அவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## பிள்ளையானின்...

செய்த அடிப்படை உரிமை மனு தொடர்பான தீர்ப்பை உயர் நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

இவ்வழக்கின் வாய்மொழி சமர்ப்பணங்கள் நேற்று நிறைவடைந்தன.

வாதி மற்றும் பிரதிவாதி தரப்புகளின் வாதங்கள் நிறைவடைந்ததை தொடர்ந்து, வழக்கின் தீர்ப்பை பிறிதொரு திகதியில் அறிவிப்பதாக உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தனது கைது மற்றும் தடுப்புக்காவல் சட்டவிரோதமானது எனக் கூறி, பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் இந்த அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கடற்படையின் விசேட...

சபைக்கு சொந்தமான பஸ் ஒன்று கடற்படையினரின் விசேட படகு மூலம் அனலைதீவுப் பகுதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

குறித்த பஸ் அனலைதீவுக்குள் போக்குவரத்தில் ஈடுபடவுள்ளமையால் அப்பகுதி மக்களின் நாளாந்த பயணங்கள் இலகுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## பஸ் கட்டணங்கள்...

பஸ் கட்டணத் திருத்தம் குறித்து பிரதியமைச்சர் பிரசன்ன குணசேன மேலும் விளக்குகையில்,

"எரிபொருள் விலை மாற்றங்கள் காரணமாக பஸ் கட்டணங்களில் திருத்தம் செய்ய வேண்டுமானால், அந்த விலை மாற்றத்தின் வீதம் 4 வீதத்துக்கும் அதிகமாக இருக்க வேண்டும் என்பது தற்போதைய கட்டண முறையின் விதியாகும்.

எனவே, இந்த விதிமுறையின் அடிப்படையிலேயே அடுத்த கட்ட முடிவுகள் அமையும்." என வலியுறுத்தினார்.

# நான்காம் ஆண்டு நினைவு

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 16 - 10 - 1944 | 03 - 06 - 2022 |



## சின்னையா தங்கராஜா (BA)

(ஓய்வுநிலை உத்தியோகத்தர், ஹற்றன் நஷனல் வங்கி)

*"அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு
ஐந்துசால் ஊன்றிய தூண்"*
-திருக்குறள்-

விழியோடு கண்ணீரும்
மனதோடு நினைவுகளும்
அகலவில்லை அப்பா!
காலங்கள் ஓடினாலும்
கரையாத காவியம் நீங்கள்

கல்வியே செல்வம் என எமை வளர்த்து
பாசத்தின் நிழலில் எமை வழிநடத்தி
உம் கடமை முடிந்ததென்று
எமை விட்டுச் சென்றீரோ!

சுட்டெரிக்கும் வாழ்க்கை வெயிலில்
சுமையறியாமல் எமக்கு நிழலாய் நின்ற
சுகமான ஆலமரமே
நான்கு ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும்
நீங்கள் அமர்ந்த நாற்காலி இன்னும்
உங்கள் நினைவுகளை சுமந்து நிற்கிறது

உழைப்பின் சிகரமாய் திகழ்ந்தவரே
உண்மையின் வடிவமாய் வாழ்ந்தவரே
நீங்கள் ஊட்டிய நற்பண்புகளும்
நீங்கள் காட்டிய நேர் வழிகளும்
நீங்கள் சொல்லிய திருக்குறள் அறிவுரைகளும்
விழியோரம் இன்னும் நிழலாடுகிறது
வழிகாட்டி நீங்கள் இல்லாமல் தவிக்கின்றது

என்றும் மறவாது உம் பாசமும்
உம் புன்சிரிப்பும்
நீங்கள் இல்லாத நொடி ஒவ்வொன்றும்
ஏக்கத்துடனேயே நகர்கின்றது
அடுத்தபிறவி ஒன்று இருந்தால் மீண்டும்
பிறக்கவேண்டும் உங்கள் பிள்ளைகளாய்...

**இல. 60
பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்**


**என்றும் நீங்கா நினைவுகளுடன்,
பாசமுள்ள மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# சட்ட நடவடிக்கை அச்சத்தினால் நாட்டை விட்டு தப்பினார் பஸில்!

## அமைச்சர் ஆனந்த விஜேபால கூறுகிறார்



கொழும்பு, ஜூன். 03

அரச நிதியை மோசடி செய்த மைக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிடும் என்ற அச்சத்தில் தான் பஸில் ராஜபக்ஷ நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளார். அவருக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாதாளக் குழுக்களுக்கும், போதைப்பொருள் ஒழிப்புக்கும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இலங்கையில் பல்வேறு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்டு வெளிநாடுகளில் பதுங்கியுள்ள குற்றவாளிகளை நாட்டுக்கு கொண்டு வருவதற்கு சர்வதேச பொலிஸின் உதவி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

சிவப்பு பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில் பலர் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்கள். வெகுவிரைவில் மேலும் பலர் நாட்டுக்கு அழைத்து வரப்படுவார்கள். அதேபோல் வெளிநாடுகளில் பதுங்கியிருந்தவாறு இலங்கையில் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

அரச நிதியை மோசடி செய்ததற்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிடும் என்ற அச்சத்தில் தான் பஸில் ராஜபக்ஷ நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளார். இவருக்கு எதிராக மாத்தறை நீதிமன்றமும், கொழும்பு கோட்டை நீதிமன்றமும் பிடியாணை பிறப்பித்துள்ளது.

பஸில் அரச நிதியை மோசடி செய்யவில்லையாயின் அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாகி தனது தரப்பு நியாயத்தை நிரூபிக்கலாம். இவர்கள் கடந்த காலங்களில் அதிகாரத்தில் இருந்து கொண்டு எவ்வாறு செயற்பட்டார்கள் என்பதை மக்கள் நன்கு அறிவார்கள்.

பஸில் இன்னும் எவ்வளவு நாள்கள் வெளிநாட்டில் பதுங்கியிருப்பார் என்பதை நாங்களும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். சர்வதேச மட்டத்தில் உரிய நடவடிக்கைகள் வெகுவிரைவாக எடுக்கப்படும்-என்றார். (அ)

# அரச நிர்வாக அனுபவம் அநுர அரசுக்கு இல்லை!

## சட்டத்தரணி நளின் பத்திரன

கொழும்பு, ஜூன். 03

அரச நிர்வாகம் குறித்த எந்தவொரு அனுபவமும் இல்லாதவர்கள், தமக்குக் கிடைத்த ஒரேயொரு பிரதேச சபையைக் கூட நிர்வகிக்கும் திறன் இல்லாமல் செயற்பட்டனர். இவர்களின் வாக்கு வங்கி எப்போதும் மூன்று சதவீதத்துக்குள் தான் இருந்தது. பிரதான கட்சிகளுக்கிடையில் நிலவிய அதிகார மோதலின் விளைவாகவே, இன்று இவர்கள் அதிகாரத்துக்கு வரக்கூடிய துரதிர்ஷ்டவசமான நிலை ஏற்பட்டது என சர்வஜன அதிகாரம் கட்சியின் தொழில் வல்லுநர்கள் சங்கத்தின் அழைப்பாளர் சட்டத்தரணி நளின் பத்திரன தெரிவித்தார்.

சர்வஜன அதிகாரம் கட்சியின் காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது: -

2022ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட பாரிய பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து, மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடி அன்றைய அரசைப் பதவியிறக்கி, அன்றைய ஜனாதிபதியையும் வீட்டுக்கு அனுப்பி மாற்றத்தை ஏற்படுத்தினர். அந்தப் போராட்டத்துக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த அரசு, மக்கள் ஓரளவு நிம்மதியாக வாழ்வதற்கான சூழலை உருவாக்கியதுடன், போராட்டக் காலத்துக்கு முந்தைய எரிபொருள் மற்றும் எரிவாயு விலைகளைக் மிகக் குறுகிய காலத்துக்குள் குறைத்து மக்களுக்கு நிவாரணங்களை வழங்கியது. அந்தக் காலகட்டத்தில்தான், மறுமலர்ச்சி என்ற கோஷத்துடன் தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்தது.

நாட்டைச் சுபீட்சமான நாடாக மாற்றி, ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு இலட்சம் ரூபா வருமானம் ஈட்டிக்கொடுப்பதாகவும், மின்சாரக் கட்டணத்தை மூன்றில் இரண்டு பங்காகக் குறைப்பதாகவும், எரிபொருள் விலைகளைக் குறைத்து மக்களுக்குச் சிறந்த வாழ்வை வழங்குவதாகவும் வாக்குறுதி அளித்தே இவர்கள் ஆட்சிக்கு வந்தனர். ஆனால், இன்று மறுமலர்ச்சியின் உண்மையான விபரீத விளைவுகளை மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

ஜே.வி.பி. மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகிய இரு தரப்பினரும் தற்காலிகமாக அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கில் கூட்டணி அமைத்தே ஆட்சியைக் கைப்பற்றினர். நாட்டின் பிரதான கட்சிகளுக்கிடையில் நிலவிய அதிகார மோதலால், நாட்டின் சொத்துக்களை அழித்து, மனிதர்களைக் கொன்று, ஆட்சி இயந்திரத்தைச் சீர்குலைத்த, ஒரு போதும் அதிகாரத்துக்கு வரக்கூடாத ஒரு தரப்பினரே இன்று ஆட்சியில் அமர்ந்துள்ளனர்.

இன்னும் மக்களை ஏமாற்ற முற்படாமல், இப்போதே இந்த ஆட்சியை மக்கள் தூக்கி எறியும் நிலையை உருவாக்காமல், நாட்டை நிர்வகிக்கக்கூடிய தகுதியுடைய ஒருவரிடம் பொறுப்பை ஒப்படைக்குமாறு அரசைக் கோருகின்றோம்-என்றார். (அ)

# வடக்கு ரயில் பாதையை நேரில் பார்வையிட்டார் இந்திய தூதுவர்!

கொழும்பு, ஜூன். 03

இந்திய அரசாங்கத்தின் 05 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியின் கீழ் மறுசீரமைக்கப்பட்ட வடக்கு ரயில் பாதையை, இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா நேற்று முன் தினம் திங்கட்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார்.

கடந்த வருடம் ஏற்பட்ட டித்வா சூறாவளியால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளை மறுசீரமைப்பதற்காக இந்தியா வழங்கிய 450 மில்லியன் அமெரிக்க டொலர் உதவித் திட்டத்தின் ஒரு பகுதியாகவே இந்த ரயில் பாதை சீரமைப்புப் பணி முன்னெடுக்கப்பட்டதாக சந்தோஷ் ஜா குறிப்பிட்டார்.

இது குறித்து தனது அதிகாரபூர்வ எக்ஸ் சமூக வலைத்தளப் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ள இந்திய தூதுவர், "போக்குவரத்து இணைப்பை மீண்டும் ஏற்படுத்துதல் மற்றும் மீட்புப் பணிகளை விரைவுபடுத்துதல்!" எனத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன்துறை ஆகிய பகுதிகளை நாட்டின் ஏனைய பாகங்களுடன் இணைக்கும் மிக முக்கிய போக்குவரத்துப் பாதையான இந்த வடக்கு ரயில் பாதை, கடந்த ஆண்டு வீசிய டித்வா சூறாவளி காரணமாகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

குறிப்பாக, இந்தச் பேரழிவின் போது வடக்கு ரயில் பாதையிலிருந்த 5 பாலங்கள் பலத்த சேதங்களுக்குள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## லலித், குகன் காணாமற்போன வழக்கு;

# கோட்டாபயவை நிகழ்நிலையில் சாட்சியமளிக்க நீதிமன்று அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 03

யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்ட லலித் மற்றும் குகன் ஆகிய இருவர் தொடர்பில் நிகழ்நிலையில் சாட்சியம் அளிக்க அப்போதைய பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு யாழ் . நீதவான் நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

கடந்த 2011ஆம் ஆண்டு மனித உரிமைகள் தினமான டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி யாழ்ப்பாண நகரில் நடத்த திட்டமிடப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டத்தை ஒழுங்கமைப்பதில் ஈடுபட்டிருந்த லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் ஆவரங்கால் பகுதியில் வைத்து முதல் நாள் காணாமல் ஆக்கப்பட்டனர்.

அதனை அடுத்து லலித் மற்றும் குகன் ஆகியோரின் உறவினர்களால் ஆள்கொணர்வு மனு கடந்த 2012ஆம் ஆண்டு கொழும்புக் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுமீதான விசாணையின்போது, இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட சாட்சிகளை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றுக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனையடுத்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் 2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் 19ஆம் திகதி விசாரணைகள் ஆரம்பமாகின.

அந்நிலையில் குறித்த வழக்கு விசாரணைகளின் போது கடந்த 2017ஆம் ஆண்டு மனுவின் சாட்சியாளர்கள் பட்டியலில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர்கள் கோட்டாபய ராஜபக்ஷவின் பெயர் இணைக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணைகளை தொடர்ந்து , கோட்டாபய ராஜபக்ஷ மன்றில் தோன்றி சாட்சியமளிக்குமாறு மன்று உத்தரவிட்டது.

பாதுகாப்பு காரணங்களால் தன்னால் யாழ்ப்பாணம் வர முடியாது என தொடர்ச்சியாக கோட்டாபய தெரிவித்து வந்தார்.

இந்நிலையில் வழக்கு விசாரணைகளின் போது, கோட்டாபய நிகழ்நிலை ஊடாக தோன்றி மன்றில் சாட்சியம் அளிக்க தனது சட்டத்தரணிகள் ஊடாக மன்றில் விண்ணப்பம் செய்தார்.

இதனை அடுத்த, கோட்டாபய ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வருகை தருவதில் உள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் தொடர்பில் சத்தியக் கடதாசியை மன்றில் சமர்ப்பிக்குமாறு மன்று உத்தரவிட்டு இருந்தது.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது, கோட்டாபய நிகழ்நிலை ஊடாக மன்றில் தோன்றி தனது சாட்சியங்களை பதிவு செய்ய மன்று அனுமதித்துள்ளது. (அ)

# தனிநபர் ஒருவருக்கான மாதாந்த செலவு உயர்வு!

கொழும்பு, ஜூன். 03

அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தனிநபர் ஒருவருக்கு மாதத்திற்குத் தேவையான குறைந்தபட்ச செலவு 17,117 ரூபாவாக அதிகரித்துள்ளதாகத் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் மாதத்திற்காக அந்தத் திணைக்களம் வெளியிட்டுள்ள அதிகாரபூர்வ வறுமைக் கோட்டின்படி, மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் வறுமைக் கோட்டின் பெறுமதி 427 ரூபாவினால் அதிகரித்துள்ளது. மார்ச் மாதத்தில் அதிகாரப்பூர்வ வறுமைக் கோட்டின் பெறுமதி 16,690 ரூபாவாகப் பதிவாகி யிருந்தது.

இந்த அதிகாரபூர்வ வறுமைக் கோடு என்பது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தனிநபர் ஒருவருக்கு மாதத்திற்குத் தேவையான குறைந்தபட்ச செலவை மதிப்பிடுகிறது.

ஏப்ரல் மாதத்திற்கான அதிகாரப்பூர்வ வறுமைக் கோட்டின்படி, அதன் அதிகபட்ச பெறுமதி கொழும்பு மாவட்டத்திலிருந்து பதிவாகியுள்ளதுடன், அது 18,461 ரூபாவாகும்.

வறுமைக் கோட்டின் குறைந்தபட்ச பெறுமதி மொனராகலை மாவட்டத்திலிருந்து பதிவாகியுள்ளதுடன், அது 16,367 ரூபாவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.06.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.